மனுக்குலம் பெரியதொரு குடும்பம்... கிறிஸ்மஸ் தினத்தில் நமது உள்ள உணர்வு இதற்கு ஆதாரம்.

– திருத்தந்தை 23ம் யோவான்

‘அவரே அமைதியை அருள்வார்’(மீக்கா5:4). **இயேசு அமைதியின் அரசர், அவர் வந்து விட்டார்.** உலகிற்கு மகிழ்ச்சி! உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என மரியாள் கூறிய வார்த்தை கடவுளின் மீட்புத் திட்டத்தைச் சாத்தியமாக்கியது. ‘ஆண்டவரின் அடிமை’ என்று இன்று அவளை நாம் போற்றுகிறோம்.

திருவருகை நெருங்கி வரும் இவ்வேளையில், குழந்தையாக பிறந்த கடவுளை வணக்கவும், இதனைச் சாத்தியமாக்கிய பெண்ணை நினைவுகூரவும் நாம் ஆவலாய் காத்திருக்கிறோம். மரியாள் எலிசபெத்தைச் சந்திப்பது பற்றியது. கருத்தரித்த இவ்விரு தாய்மார்களின் சந்திப்பு, அதிகம் பேசப்படும் விவிலியக் கதைகளில் ஒன்று. இந்த சந்திப்புப் பற்றி ஓர் எழுத்தாளர் நம்பிக்கை கண்ணோட்டத்தில் ஆழமாக வருணித்துள்ளார்.

‘ஆம் என்று மரியாள் கூறியவுடன், தூய ஆவியானவர் அவள் மீது நிழலாடினார், வார்த்தை வழியே தெய்வீக அருளை அனுமதித்தார், அது மனுவுருவானது. தமக்கு வழங்கப்பட்ட இந்த அருள், தம்மோடு முடிவு பெறாது என்பதால் குழந்தையைக் கருத்தாங்கிய அவள் எலிசபெத்தைக் காண செல்கிறாள். மற்றவர்களுக்கு முன்பாக வார்த்தை மனுவுருவான அருளை அவளிடம் பகிர்ந்து கொள்கிறாள். அருளாள் ஆட்கொள்ளப்பட்ட எலிசபெத், மரியாளைப் போற்றிப் பாடுகிறாள். இவளையும் தாண்டி, அவள் வயிற்றில் இருக்கும் சிசுவும் அதே அருளால் துள்ளுகிறது. இவ்வேளையில் தமது மகனை நினைத்துக் கொண்டு கடவுளைப் போற்றுகிறாள். பேறுடையாள் என்று எல்லாத் தலைமுறையும் போற்றும்’.

வார்த்தை மனுவுருவான அருளை மரியாள் மனதில் நிறுத்தும் வேளையில் எலிசபெத் வயிற்றில் இருக்கும் குழந்தை துள்ளுவது அதிசயம். அதனை கத்தோலிக்க மறைக்கல்வி ஏடு கூறுவது:

கடவுளால் அனுப்பப்பட்ட மனிதர் இருந்தார், அவரது பெயர் யோவான். தமது தாயின் வயிற்றில் இருக்கும் போது கன்னி மரியாள் தூய ஆவியால் கருவுற்ற கிறிஸ்துவால் ஆவியால் நிரப்பப்பட்டார். எலிசபெத்தை மரியாள் சந்தித்தது, கடவுளே தம் மக்களைச் சந்திப்பதாகும்.

நமது வாழ்வில் குழந்தை இயேசுவை வரவேற்கும் போது, மரியாளைப் போல் இந்த அருளை பிறரிடம் பகிர்ந்து கொள்வதில் விரைவாக செயல்படுவோம். மரியாளின் பாடல், தலைமுறை தலைமுறையாய் பாடும்: ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது...

அனைவருக்கும் கிறிஸ்ம்ஸ் வாழ்த்துகள்! †

**வாரம் ஒரு வசனம்**

**இயேசு அமைதியின் அரசர், அவர் வந்து விட்டார்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 51/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

23 டிசம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகை காலம் 4ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# மரியாளும் குழந்தை இயேசுவும் அமைதியைக் கொண்டு வருகின்றனர்



## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 டிசம்பர் (மார்கழி) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவே இன்றியமையாத பரிசு (கொடை)***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** திருவருகைக்காலம் 4ஆம் ஞயிறு — **சனி 22-12-2018 - ஞாயிறு 30-12-2018**

மீக் : 5: 1-4a    தி.பா: 79: 2ac, 3bc, 4bcd, 15-16, 18-19    எபிரே: 10: 5 - 10    லூக்கா: 1: 39-45

**"கடவுளே, எங்களை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும்" - திபா 79**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 22 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித ஆர்தர்) | |
| ஞாயிறு | 23 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) :(இளைஞர்கள்)<br>திருப்பலி (ஆ) (புனித பெனடின் 1)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 மணி தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி)<br>மாலை 6.00 கம் செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி** வகுப்புகள் நடைபெறாது (பள்ளி விடுமுறை) 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் ஜனவரி (தை) 6 ஆம் திகதி நடைபெறும்<br>**முதியோர் கிறிஸ்துவ** புகுமுக வகுப்பு ( முகிபுவ ) வகுப்புகள் நடைபெறாது |
| திங்கள் | 24 | **கிறிஸ்மஸ் நள்ளிரவு திருப்பலி :** மாலை 5.00 (ஆ) 7.00 மணி (தமிழ்), இரவு 9.00 (சீனம்), 11.00 மணி (ஆங்கிலம்) தித்தி (சீனம்) மாலை 4.30 ( திருப்பலிக்கு 20 நிமிடங்களுக்கு முன்னதாக கிறிஸ்மஸ் மகிழ்ச்சிப் பாடல்கள் பாடப்படும்) | | |
| செவ் | 25 | **கிறிஸ்மஸ் தின திருப்பலி :** காலை 7.00 (தமிழ்) காலை 9.00 (ஆங்கிலம்) காலை 11.00 (சீனம்) பகல் 1.00 (தேமொழி) ( அனைத்து திருப்பலிகளில் குழந்தைகளுக்கான திருமுழுக்கு வழங்கப்படும் ) | | |
| புதன் | 26 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 27 | 6.45 கா | திருப்பலி | |
| வெள் | 28 | 6.45 கா | திருப்பலி | |

**கிறிஸ்து பிறப்புக்காலம் - திரு குடும்ப விழா**

1 சாமு : 1: 20-22, 24-28    தி.பா: 84: 1-2, 4-5, 8-9    1 யோவான்: 3: 1-2, 21-24    லூக்கா: 12: 41-52

**"ஆண்டவரே உமது இல்லத்தில் தங்கியிருப்போர் பேறுபெற்றோர்" - திபா 83**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 29 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(குடும்ப வாழ்வுப் பணிக்குழு) | |
| ஞாயிறு | 30 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) :திருவழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆ) (குடும்ப வாழ்வுப் பணிக்குழு)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி** வகுப்புகள் நடைபெறாது (பள்ளி விடுமுறை) 2019 ஆம் ஆண்டிற்கான பதிவுகள் ஜனவரி (தை) 6 ஆம் திகதி நடைபெறும்<br>**முதியோர் கிறிஸ்துவ** புகுமுக வகுப்பு ( முகிபுவ ) வகுப்புகள் நடைபெறாது |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### *2018 டிசம்பர் (மார்கழி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:

15/16 டிசம்பர் 2018 ரிம: 9,057.70

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக வழி நடத்துவாராக!

**2)திருவழிபாட்டுப் பொருட்கள் விற்பனை**

அ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (ஆ) ரிம: 6.00
ஆ) 2019 திருவழிபாட்டு நாட்காட்டி (த) ரிம: 6.00
இ) 2019 திருவழிபாட்டு நாட்குறிப்பு (கு/ஆ) ரிம:20.00

3) **ஆலய சீரமைப்பு மற்றும் மேம்பாட்டுக்காக உங்களிடமிருந்து நிதியை வரவேற்கிறோம்.** உங்களுடைய காசோலைகளை Church of Visitation பெயரில் எழுதவும். உங்களுடைய ஆதரவுக்கு நன்றி

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.**
அகஸ்டின் அந்தோனிசாமி (இறப்பு: 18-12-2018)
**முடிவில்லா ஒளி இவர்மேல் ஒளிர்வதாக!**

### 2019 ஆம் ஆண்டின் புத்தாண்டு திருப்பலிகள்

- **புத்தாண்டு நள்ளிரவு திருப்பலி (31-12-2018) திங்கள்**
  நான் கு மொழி திருப்பலி இரவு 8.00 மணி தொடர்ந்து நள்ளிரவு வரை அமைதியில் செபித்தல்
- **புத்தாண்டு திருப்பலி 01-01-2019 செவ்வாய்**
  காலை 7.00 மணி (தமிழ்) காலை 9.00 மணி (ஆங்கிலம்)
  காலை 11.00 மணி (சீனம்) பகல் 1.00 மணி (தேமொழி)
  மாலை 4.00 மணி (சீ) தித்தி
- **உலக இளைஞர் தினம் 2019** பனாமாவில் நடைபெற இருக்கும் இளைஞர் மா நாட்டில் நம் பங்கிலிருந்து எவ்லின் மோசஸ் (சாகா) கலந்துகொள்கிறார். அவருக்கு நம் செபங்களையும் ஆதரவையும் வழங்குவோம்.

**கிறிஸ்மஸ் பொதுவிடுமுறையை** முன்னிட்டு பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும்.
அவசர தேவைக்கு: நாதன் 012-684 0750 (அ)
ஜோன் மெய்னார்ட் 016-5033903

இன்று திருப்பலியை வழி நடத்திய இளைஞர் குழுவினருக்கு நமது நன்றிகள்





**கிறிஸ்மஸ் நன்னாளில் இரக்கமாயிருங்கள்**

- அன்புக்குரியவர்களோடு கொண்டாடுங்கள்
  - நோயுற்றோர், முதியோர், அன்புக்குரிய நண்பர் இவர்களோடு கிறிஸ்மஸ் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளுங்கள்
  - அன்னியரை வரவேற்றல்/கடைசியான சகோதர சகோதரிகளோடு உங்கள் உணவைப் பகிர்ந்து கொள்ளுங்கள்
  - தயவு செய்து உணவை வீணாக்காதீர்கள்
- **கிறிஸ்மஸ் இரவு திருப்பலி கொண்டாட்டம்** மினவுதல் தேவாலய மண்டபத்திலும் ஒளிகாட்சி வழியே காட்டப்படும். ஆலயத்திற்கு வெளியே கூடாரம் இருக்காது.
- **பினாங்கு குருமட மாணவர் சகோதரர் பிலிப் ஆசீர்வாதம்** அவர்கள் (இரண்டாவது ஆண்டு தத்துவவியல்) மேய்ப்புப்பணி அனுபவத்திற்காக ஒரு மாதம் நம் பங்கில் தங்கியிருப்பார். அவருக்கு நம்முடைய ஆதரவை வழங்குவோம். ( 03-01-2019 - 03-02-2019)
- **ஞாயிறு மறைக்கல்வி வகுப்புகள்** ஜனவரி 6,2019 முதல் தொடங்குகிறது.
- பங்கில் இயங்கும் அனைத்து பணிக்குழுக்களும் தங்களுடைய செய்திகளை அறிக்கைப் பலகையில் அறிவிப்பு செய்ய அழைக்கப்படுகின்றீர்கள். பொறுப்பாளர்கள் கவனத்தில் கொள்ளவும்.
- **தூதுரைப்புப்பணியின் கீழ் "இன்றைய தூதுரைப்பணியின் சீடர்கள்"** என்ற கருப்பொருளில் உருவாக்கப்பயிற்சி. வழங்குபவர்: ஜூட் அந்தோன் (கோலாலம்பூர்) நாள்:21-01-2019 (திங்கள்) பொது விடுமுறை (தைப்பூசம்) உருவாக்கப்பணிக்குழு மற்றும் தூய ஆவி அருங்கொடைப் பணிக்குழுவினர் இணைந்து இதை ஏற்பாடு செய்கின்றனர். கட்டணம் ரிம:10/-
- **குருவானவராக/ துறவறவாழ்வுக்காக அழைப்பு உங்களுக்கு உள்ளதா?** உங்களுக்கு இதைப் பற்றிய எண்ணம் இருந்தால், பங்கு குருக்கள் அருட்திரு ஜோர்ஜ் , சேவியர் இவர்களிடம் பேசலாம். நாள்:12-01-2018. காலை 9.00 மணி
- **ஆலய வளாகம் மற்றும் கழிவறை சுத்தத்தை பராமரித்தல்**; கழிவறைகளை பயன்படுத்தியபின் சுத்தமாக இருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். டிஷ்யு பேப்பர், குழந்தைகள் மற்றும் பெண்கள் பயன்படுத்தும் நாப்கின் அனைத்தையும் அதற்குரிய இடத்தில் போடுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஆலயத்தையும் வளாகத்தையும் மற்றும் இருக்கைகள் அருகிலும் அசுத்தம் செய்யாதீர்கள். நன்றி.
- **உங்களுடைய சொந்த உடைமைகளைப் பாதுகாத்து கொள்ளுங்கள்**. திருப்பலி மற்றும் திருவிழா நேரங்களில் உங்கள் உடைமைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். இருக்கைகளில் வைத்துவிட்டு செல்ல வேண்டாம்.

**பங்கு மக்கள் அனைவருக்கும்**
**ஆவியில் நிறைந்த, ஆசீர்வதிக்கப்பட்ட**
**கிறிஸ்மஸ் மற்றும் *2019* புத்தாண்டு நல்வாழ்த்துகள்**
**அருட்திரு. ஜோர்ஜ், சேவியர் மற்றும்**
**மினவுதல் தேவாலயஅலுவலக ஊழியர்கள்**